1970 ஆகஸ்ட் 26]

ரஷ்யாவுக்குத் தமிழ்ப் படங்கள்

*32 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரஷ்யாவுக்கு நல்ல தமிழ்ப் படங்களை அனுப்ப அரசு ஏற்பாடு செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

மதுரை செந்தமிழ் கல்லூரி

*33 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு கல்வி சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள செந்தமிழ்க் கல்லூரி, தற்பொழுது கலைக் கல்லூரியாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் காரணமென்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) இல்லை. ஆனால், 1969-70-ல் தமிழில் ஒரு மூன்று வருடப் பட்டப்படிப்பு துவக்க செந்தமிழ்க் கல்லூரிக்கு மதுரைப் பல்கலைக்கழகம் அனுமதி அளித்துள்ளது. இவ்விஷயம் முற்றிலும் பல்கலைக் கழகத்தினால் முடிவு எடுக்கப்படுவதாகும்.

புலவர் பொ. பொன்னம்பலம்: பேரவைத் தலைவரவர்களே. மதுரைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் அமைந்துள்ள மதுரையிலுள்ள செந்தமிழ்க் கல்லூரியில், தமிழக வரலாறு சம்பந்தமான பாடங்கள், கல்வெட்டுக்கள் சம்பந்தமான பாடங்கள் எடுக்கப்பட்டு, வேறு வகையில் பாடங்கள் இணைக்கப்பட்டிருப்பது உண்மையா? ஆமெனில், அதன் காரணம் என்ன என்பதை அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத்தினுடைய ஆட்சிக்குழு முடிவு செய்ததற்கிணங்க செந்தமிழ்க் கல்லூரியிலும், மற்றொரு கல்லூரியிலும் தமிழை ஒரு பாடமாக வைத்து, அதற்குப் பட்டம் வழங்கும் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. பி.யூ.சி. ஸ்பெஷல் தமிழ் பி.ஏ., ஸ்பெஷல் தமிழ், பார்ட் 2, பார்ட் 3 என்று இரண்டு பிரிவுகள் அமைத்து, 6 தாள்கள் எழுதும் அளவுக்குத் தமிழில் கொடுக்கப்பட்டு, அதற்கு டிகிரி கொடுக்கும் சூழ்நிலை இருக்கிறது. மதுரைப் பல்கலைக் கழகம் முடிவு செய்து, மதுரை செந்தமிழ்க் கல்லூரியிலும், மற்றொரு கல்லூரியிலும் பி.யூ.சி. ஸ்பெஷல் டமில், புகுத்தப்பட்டது, 68-69-இல் புகுத்தப்பட்டது. 69-70-ல் பி.ஏ., ஸ்பெஷல் டமில் வைக்கப்படும் அளவிற்கு அனுமதி கிடைத்து, செந்தமிழ்க்